[26th March 1964

தற்கொலை செய்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது. போலிஸாரால் அடித்து துன்புறுத்தப்பட்டு, செத்தார்களென்று ஏதேனும் செய்தி சர்க்காருக்கு வந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினருக்கே அம் மாதிரி செய்தி கிடைக்கவில்லையென்றால், நான் சொடுப்பதற்கில்லை. போலீஸாரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டவர்களும் இல்லாமல் இல்லை. இதையெல்லாம் அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. கோ. சி. மணி : குறிப்பிட்ட போலீஸ் லாக்கப்பில் இருந்த கைதி தற்கொலை செய்துகொள்வதற்குக் காரணமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆளுங் கட்சியினர் தங்களுடைய அரசியல் விருப்பு வெறுப்புகளுக்காக போலீஸ் அதிகாரிகளை நாடுகின்ற காரணத்தால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பதால், ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா? இனி மேலாவது நல்ல முறையில் விசாரணை செய்து இப்படி நிகழ்ச்சிகள் பெருகுவதற்குக் காரணமென்ன என்பதை கண்டு அறிய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதை விசாரித்தது ஒரு மாஜிஸ்டிரேட்.

"கேர்" பால் பவுடர்

* 409 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஒரு வருடத்திற்கு அமெரிக்காவிடம் இருந்து நமது அரசாங்கத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள பால் பவுடர் கிடைக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The value of milk powder received from America through the CARE Organisation during 1963–64 is about Rs. 1·12 crores.

கம்பளிப் பூச்சி ஒழிப்பு

* 410 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் தென்னாற்காடு ஜில்லாவிலே புஞ்சை நிலங்களிலே கம்பளிப் பூச்சியை ஒழிக்க "ஏரியல் ஸ்ப்ரே" (**Aerial spray**) செய்வதற்காக சர்க்கார் எவ்வளவு **Subsidy** கொடுத்தது?

26th March 1964]

(இ) 1963-64-க்கும் மேற்படி மாவட்டத்தில் கம்பளிப் பூச்சியை ஒழிக்க Aerial spray செய்வதற்கு நமது சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

(அ) & (இ) சபையில் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. கமலநாதன் : இந்தக் கம்பிளிப் பூச்சித் தொல்லை எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறது ? எங்கள் பகுதியில் அதிகமாக இருப்பதால், தீவிர கம்பளிப் பூச்சி ஒழிப்பு திட்டம் அமலாக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலிலே பொள்ளாச்சிப் பகுதியிலே அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். பின்னர் தென் ஆற்காடு மாவட்டத்தில் அதிகமாக இருந்ததால் அங்கேயும் ஏரோப்ளேன் மூலம் மருந்தைத் தெளித்து பூச்சிகளைக் கொல்ல ஏற்பாடு செய்தோம். சேலம் மாவட்டத்தில் அவ்வாறிருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. அவ்வாறு இருந்தால் கனம் அங்கத்தினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : This caterpillar menace has extended to other districts also. It is there in Chingleput district also. Sufficient precautions have not been taken to eradicate the menace. For doing aerial survey and aerial spraying, it is said sufficient number of aircrafts are not available. What are the other preventive arrangements that the Government are contemplating to take to eradicate this caterpillar menace?

THE HON. SRI P. KAKKAN : If the hon. Member were to put a separate question, I will give a definite reply.

திரு. ம. கமலநாதன் : எங்கள் பகுதி மலைப்பாங்கான பகுதி. ஏரோப்ளேன் வருவதற்கு வசதி கிடையாது. ஆகவே ஹெலிகாப்டர் மூலமாகவோ அல்லது பவர் ஸ்பிரேயர் மூலமாகவோ தெளிப்பதற்கு முயற்சி எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கடலை உற்பத்தியோ அல்லது மற்ற பயிர்கள் உற்பத்தியோ செய்து இப்படி பூச்சிகள் வந்தால் வசதியுள்ள மரங்கள் இல்லாத பகுதியிலே ஏரோப்ளேன் மூலம் மருந்து அடிப்பதற்கு சாதகமாக இருந்தால் அப்பேர்ப்பட்ட பகுதிகளில் ஏரோப்ளேன் வைத்து அடிக்கலாம். அப்படியில்லாவிட்டால் வேறு முறைகளைக் கையாண்டு செய்யலாம்.

Appointments of District Munsifs

* 411 Q.—DR. B. NATARAJAN : Will the Hon. the Minister for food be pleased to state—

(a) whether it is a fact that candidates selected for the post of District Munsifs during 1961 and 1962 have not yet been appointed; and

---

a Printed as Appendix I on pages 110–111.